நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பிறகு வாய்ப்புத் தருகிறேன். அமைதியாக இருங்கள்.*

6. கவன ஈர்ப்பு

தமிழ்நாட்டில் கொப்பரைத் தேங்காயைக் குறைந்தபட்ச ஆதார விலையில் கொள்முதல் செய்வது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V.ஜெயராமன், பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் கொப்பரைத் தேங்காயைக் குறைந்தபட்ச ஆதார விலையில் கொள்முதல் செய்வது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு நல்ல விலை பெறுவதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

தலைமையிலான அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

தற்போது, தேங்காய் கொப்பரைகளின் விலை குறைந்துள்ளதால், தென்னை விவசாயிகளுக்கு உதவும் வகையில் விலை ஆதரவுத் திட்டத்தில் குறைந்தபட்ச ஆதார விலையில் தேங்காய் கொப்பரையைக் கொள்முதல் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் 4 இலட்சத்து 35 ஆயிரத்து 621 ஹெக்டேர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகின்றது. இவற்றிலிருந்து 470 கோடியே 64 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தியாகின்றன. தேங்காயின் விலை குறையும்போது விவசாயிகள் அவற்றை மதிப்பு கூட்டி தேங்காய் கொப்பரைகளாக விற்பனை செய்து வருகின்றனர்.

சமீப காலமாக தேங்காய் கொப்பரைகளின் விலை குறைந்தபட்ச ஆதார விலையைவிட குறைவாக இருந்து வருகிறது. விலை ஏற்ற இறக்கத்திலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்து, தேங்காய் கொப்பரைகளுக்கு நல்ல விலை கிடைக்கும்பொருட்டு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், சிவகங்கை, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், நாமக்கல், வேலூர், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருப்பூர், ஈரோடு, தேனி, தருமபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 50,000 மெட்ரிக் டன் தேங்காய் கொப்பரை குறைந்தபட்ச ஆதார விலையில் கொள்முதல் செய்யப்படவுள்ளது.

மேற்கூறிய மாவட்டங்களில் உள்ள தென்னை விவசாயிகளிடமிருந்து தேங்காய் கொப்பரையை எளிதில் கொள்முதல் செய்வதற்காக, கொள்முதல் மையங்களைத் திறப்பதற்கு தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மத்திய அரசினால் 2019 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலையான பந்து கொப்பரைக்கு கிலோ ஒன்றுக்கு 99 ரூபாய் 20 பைசா மற்றும் அரவைக் கொப்பரைக்கு கிலோ ஒன்றுக்கு 95 ரூபாய் 21 பைசா என்ற அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும். கொள்முதல் பணி அடுத்த ஆறு மாதங்கள் நடைபெறும்.

5,000 மெட்ரிக் டன் பந்து கொப்பரைகளும், 45,000 மெட்ரிக் டன் அரவைக் கொப்பரைகளும் கொள்முதல் செய்திட தமிழ்நாடு அரசால் திட்டமிடப்பட்டுள்ளது.

[திரு. இரா. துரைக்கண்ணு] [2019 ஜூலை 11

விவசாயிகள் கொள்முதல் நிலையங்களை அணுகி தங்களது பெயர்களைப் பதிவு செய்திடலாம். பெயர்களைப் பதிவு செய்யும்போது, நிலச் சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை மற்றும் வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றின் நகல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

மத்திய அரசின் கொள்முதல் நிறுவனமான நாஃபெட் நிறுவனம் பரிந்துரைக்கும் குறைந்தபட்ச தரத்தில் கொப்பரை இருத்தல் அவசியமாகும்.

தமிழகத்தின் ஆதார விலைத் திட்டத்தின்மூலம் 50,000 மெட்ரிக் டன் கொப்பரை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தால் 25,000 மெட்ரிக் டன்னும், டான்ஃபெட் நிறுவனத்தால் 25,000 மெட்ரிக் டன்னும் கொள்முதல் செய்யப்படவுள்ளன.

இதற்காக, மாவட்டவாரியாக இலக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு கொப்பரை கொள்முதலுக்காக நிர்ணயிக்கப்பட்ட தரம் குறித்து உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மாவட்ட ஆட்சியர்மூலம் விளம்பரம் செய்யப்பட்டு கொள்முதல் செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தென்னை விவசாயிகளின் நலன் கருதி செயல்படுத்தப்படும் இத்திட்டத்தினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11-30

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுமார் 9 இலட்சம் ஏக்கரில் தென்னை விவசாயம் நடைபெறுகிறது. தென்னை விவசாயத்தின்மூலம் 470 கோடியே 64 இலட்சம் தேங்காய்கள் விவசாயம் செய்யப்படுகின்றன. இந்தக் கொப்பரைத் தேங்காய்க்கான விலை 1995 ஆம் ஆண்டில் ரூ.25 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு ஒரு கிலோ

கொப்பரைத் தேங்காய் ரூ.75.11-க்கு விற்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் புதுதில்லியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியும், நேரில் சந்திக்கும்போதெல்லாம் வலியுறுத்துவதன் மூலமாகவும், 30 ஆண்டு காலத்தில் முதல் முறையாக ஒரு கிலோ கொப்பரைத் தேங்காயின் விலை ரூ.75.11 பைசா என்பதிலிருந்து ரூ.95.21 பைசாவாக உயர்த்திக் கொடுக்கப்பட்டு, 9 இலட்சம் ஏக்கரில் விவசாயம் செய்கின்ற தென்னை விவசாயிகளுடைய மனதில் பால்வார்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை பணிவோடு உரித்தாக்கிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தென்னை விவசாயம் என்பது தமிழ்நாட்டில் பொள்ளாச்சி, வால்பாறை, தொண்டாமுத்தூர், திருப்பூர் மாவட்டத்தில், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், தாராபுரம் மற்றும் கிணத்துக்கடவு, தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், பேராவூரணி, பட்டுக்கோட்டை, அதிராமபட்டணம், கும்பகோணம், புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆலங்குடி, திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர், மன்னார்குடி, நாகை மாவட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் முத்துப்பேட்டை, மதுரை மாவட்டத்தில் சோழவந்தான், கொட்டாம்பட்டி, தேனி மாவட்டத்தில், கம்பம், கூடலூர், கோம்பை, பெரியகுளம், கடலூர் மாவட்டத்தில் கடலூர், சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி, இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழக்கரை, திண்டுக்கல் மாவட்டத்தில் நத்தம் மற்றும் வத்தலகுண்டு, ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் பரவலாகவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் முழுவதுமாகவும், தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் பரவலாகவும் தென்னை விவசாயம் நடைபெறுகின்றது. எனவே, தென்னை விவசாயிகளின் நலன் கருதி, மத்திய அரசு அறிவித்த குறைந்தபட்ச ஆதார விலை ரூ.95.21 பைசாவிற்கு உடனடியாக இரண்டொரு நாட்களில் கொப்பரைத் தேங்காய் கொள்முதலை நம்முடைய அரசு தொடங்குமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை விவசாயிகளின் நலன் கருதி

கொப்பரைத் தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதார விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.105 ஆக உயர்த்தி நிர்ணயிக்க வேண்டுமென்று விவசாயிகளினுடைய காவலனாக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பியதன் மூலமாக இன்றைக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக, பந்து கொப்பரைத் தேங்காய் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.99.20 பைசாவாகவும், அரவை கொப்பரைத் தேங்காய் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.95.21 பைசாவாகவும் வழங்கப்பட்டுவருவது, தொடர்ந்து இன்றிலிருந்து அல்ல, நாளையிலிருந்து 6 மாத காலத்திற்கு கொப்பரைத் தேங்காய் அரசு மூலமாகவும், TANFED மூலமாகவும் கொள்முதல் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை விவசாயத்தின்மீது உயர்ந்த பற்றும் பாசமும் மிகுந்த தென்னை விவசாயிகள், தென்னையைப் பற்றி குறிப்பிடும்போது, எங்கள் ஊர் பக்கம் ‘பெற்ற பிள்ளை சோறு போடவில்லையென்றாலும், வெச்ச பிள்ளை சோறு போடும்’ என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அந்த வகையில், இதுவரை 2012 ஆம் ஆண்டு 29,999 மெட்ரிக் டன் கொப்பரை 15 கோடியே 29 இலட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கொப்பரையானது கொள்முதல் செய்யப்பட்டு, பிறகு மார்க்கெட்டில் NAFED மூலம் விற்பனை செய்யப்பட்டபோது, 20 கோடி ரூபாய்க்கு மேலாக விற்று, NAFED நிறுவனம் இலாபம் அடைந்திருக்கிறது. அதேபோல் 2013 ஆம் ஆண்டு 435 மெட்ரிக் டன் கொப்பரை 2 கோடியே 28 இலட்ச ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்பட்டு, அதுவும் கூடுதலான விலைக்குதான் விற்கப்பட்டிருக்கிறது. 2016 ஆம் ஆண்டு 1170 மெட்ரிக் டன் கொப்பரையை ரூ.59.50 பைசாவிற்கு, ரூபாய் 6 கோடியே 96 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்து, கூடுதல் விலைக்கு விற்கப்பட்டிருக்கிறது. எனவே பரவலாக உள்ள தென்னை விவசாயிகள், நெல் விவசாயத்திற்கு

2019 ஜூலை 11] [முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்]

எப்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊக்கத் தொகை வழங்குகிறார்களோ, கரும்பு விவசாயிகளுக்கு எப்படி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஊக்கத் தொகை வழங்குகிறதோ, அதேபோல், தென்னை விவசாயிகளுக்கும் ரூ.95.21 பைசா என்று இருக்கிற கொப்பரை விலையோடு—இன்றைக்கு கொள்முதல் செய்யப்படுகிற கொப்பரையையெல்லாம் நாளையதினம் மொத்தமாக விற்பனை செய்யும்போது இலாபத்திற்குதான் TANFED *நிறுவனத்தால் விற்பனை செய்யப்பட இருக்கிறது. எனவே, கிலோவிற்கு 5 ரூபாய் கூட்டிக் கொடுத்து, 100 ரூபாய் 21 பைசாவிற்கு கொப்பரை கொள்முதல் செய்வதற்காக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-35

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெற்ற பிள்ளை சோறு போடாவிட்டாலும், வைத்த பிள்ளை, அதாவது தென்னம்பிள்ளை சோறு போடும்' என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதே அளவிற்கு வைத்த பிள்ளை, அதாவது தென்னம்பிள்ளை சோறு போடுவதற்கு காவலனாக ஆதரவாக இருப்பது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அவர்கள்தான் இன்றைக்கு தமிழர்களுடைய விவசாயிகளின் நலனைக் கருதி தொடர்ந்து வேளாண்மைத் துறைக்கு, பல திட்டங்களை அறிவித்து, நல்ல பல சலுகைகளையும், மானியங்களையும் வழங்கியுள்ளார்கள். அதன் அடிப்படையில் மத்திய அரசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தியதன் காரணமாகத்தான் இன்றைக்கு 99 ரூபாய் 20 பைசா என்று விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*